ஐஸ்கிறீம் வகைகள்
பாலுதா சர்பத்
பொம்பே சுவீற்ஸ்
கோழி புரியாணிக்கும்
றிக்கோ
சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ்
370, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.



பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00



றிக்கோ கோப்பியை அரைத்து பெற்றுக்கொள்ளவும்
நூடில்ஸ் வகைகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளவும்
றிக்கோ
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 13 சனிக்கிழமை (26 - 03 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 119


## ஜனாதிபதி விஜேதுங்காவின் பேரினவாதக் கொள்கையை தெற்கு மக்கள் நிராகரித்தனர்

### சந்திரிகா தலைமைத்துவத்துக்கு கிடைத்த வெற்றி என மதிப்பீடு

கொழும்பு, மார்ச் 26

ஜனாதிபதி விஜேதுங்காவின் பேரினவாதக் கொள்கையை, தென்னிலங்கை மக்கள் நிராகரித்து விட்டனர் என்பதையே தென் மாகாண சபைத் தேர்தல் காட்டுவதாக அரசியல் அவதானிகள் நேற்றுக் கருத்து வெளியிட்டனர்.

அதேவேளை, எதிரணியின் தரப்பில் பிரசாரத்தைப் பொறுப்பேற்று நடத்திய திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் தலைமைத்துவத்துக்குக் கிடைத்த வெற்றியாகும் என்றும் அவதானிகள் தேர்தல் குறித்த தமது மதிப்பீட்டில் தெரிவித்தனர்.

கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளும் —

தேர்தல் முடிவுகள் பேரினவாதக் கொள்கையை நிராகரித்து விட்டதையே வெளிப்படுத்துவதாகக் கருத்துத் தெரிவித்துள்ளன.

கொழும்பில் உள்ள பி.பி.சி. செய்தியாளர் சியாமோரன் தேர்தல் பற்றிய தமது கண்ணோட்டத்தில் தெரிவித்ததாவது:-

தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை வரவேற்றுள்ள தமிழ் அரசியல் வாதிகள், பேரினவாதக் கொள்கைக்கு இலங்கை அரசியலில் இனி இடமில்லை என்பதை சிங்கள மக்கள் தெரிவித்துள்ளதாகக் கூறியுள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு முன்னோடியாக மக்களின் கருத்தை அறியக் கூடியவாய்ப்பாக தென் மாகாண சபைத் தேர்தல் கருதப்பட்டது ஆனால் அது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பேரழிவாக முடிந்து விட்டது.

17 ஆண்டுகளாக எதிர்க் கட்சியாக இருந்து வரும் சுதந்திரக் கட்சிக்கும் ஏனைய எதிர்க் கட்சிகளுக்கும் இந்த வெற்றி புதிய வேகத்தைக் கொடுத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இனவாத அரசியல் நாட்டுக்கு ஏற்புடையது அல்ல

### தேர்தல் முடிவு குறித்து சந்திரிகா

கொழும்பு, மார்ச் 26

இனவாத அரசியல் முழு நாட்டிற்கும், சாதாரண மக்களுக்கும் ஏற்புடையதல்ல என்பதை தென் மாகாண சபைத் தேர்தல் முடிவு உறுதியாக்கி உள்ளது.

திருமதி சந்திரிகா குமாரணதுங்க பி. பி. ஸி. சந்தேசவுக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தென் பகுதி வாக்காளர்களைக் கவர்வதற்காக ஜனாதிபதி வடபகுதிப் பிரச்சினையை மக்களுக்குத் திரித்துக் கூறிவந்தார்.

ஈழம் கொடுக்கப்பட மாட்டாதெனவும் ஜனாதிபதி கூறினார்.

இக்கோஷங்கள் ஆளும் கட்சிக்கு வாக்குகளைப் பெற்றுக் கொடுக்கத் தவறிவிட்டன என்றும் திருமதி சந்திரிகா தெரிவித்தார். (இ-எ-6)

## ஈழ அகதிகள் 125 பேருடன் 'நரோமா' இன்று வருகிறது

### தங்குமிட நிவாரண உதவிகள் குறித்து ஏற்பாடு இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 26

தமிழ் நாட்டில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட ஈழத் தமிழ் அகதிகள் 125 பேரை ஏற்றிக்கொண்டு 'நரோமா' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வரவுள்ளது.

திருமலையில் இருந்து நேற்று மாலை அந்தக் கப்பல் பருத்தித்துறை நோக்கிப் புறப்படவிருந்ததாக இங்கு தகவல் கிடைத்தது.

37 குடும்பங்களைச் சேர்ந்த 125 பேர் அந்தக் கப்பலில் நாளை இங்கு வரவுள்ளனர்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக திருமலை பிரதிநிதி திரு. றொட் ஸிலிப் அகதிகளுடன் கூடவே அந்தக் கப்பலில் இங்கு வரவுள்ளார்.

இதற்கிடையில் —

குடாநாட்டுக்கு முதன் முறையாகத் திரும்பி வரும் தமிழ அகதிகளை தங்க வைப்பது குறித்தோ அவர்களுக்கான நிவாரண உதவிகள் குறித்தோ புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு யாழ். அரச அதிகாரிகளுக்கு இது வரை எந்தப் பணிப்புரையையும் வழங்கவில்லை. (இ-173-5)

## அகதிகளை திருப்பி அனுப்புவதை நிறுத்துமாறு கோரி மகஜர்கள்

### சுவீடனுக்கு கிடைக்கின்றன

ஒஸ்லோ, மார்ச் 26

சுவீடனில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதை நிறுத்துமாறு - சுவீடிஷ் குடிவரவு குடிவரவு அமைச்சுக்குப் பெரும் எண்ணிக்கையான மகஜர்கள் கிடைத்து வருவதாக—பிரஸ்தாப அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுவீடனில் இருந்து: இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது என்ற அரசாங்க முடிவை ஆட்சேபித்து அரசுக்கு மகஜர்களையும் கடிதங்களையும் அனுப்பி வைக்கும்படி உப்சாலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் ஷோர்க் சுவீடனிலும் உலகின் பல பாகங்களிலும் உள்ள தமிழ் அமைப்புக்களைக் கேட்டிருந்தார்.

அவரின் கோரிக்கைகளைத் தொடர்ந்தே, ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் முடிவை ஆட்சேபித்து தமிழ் அமைப்புகளிடம் இருந்து மகஜர்கள் கிடைத்து வருவதாக அந்த அதிகாரி கூறினார்.

''இலங்கைக்குச் சென்று திரும்பிய எமது விசாரணைக் குழு அங்கு தாம் கண்டதை தெரிவித்துள்ளது. இப்போது எமக்கு செய்யப்படும் பிரதிநிதித்துவங்களும் அறிக்கைகளும் முறையாக [illegible] படுகின்றன.

''சுவிடிஷ் அரசியலமைப்புப்படி, அகதி ஒருவரை நாடு கடத்துவது பற்றி சுவிடிஷ் வெளியார் மேன்முறையீட்டுச் சபை ஒரு முடிவு எடுத்தால் அதன் பின்னர் அந்த அகதி பற்றிய விசாரணையை இச்சபை மீண்டும் நடத்த முடியாது. மற்றப் பக்கத்தில் நாடு கடத்துவது பற்றிய சட்ட முறைமை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது'' —என் [illegible] தெரிவித்தார். [illegible]

## முச்சந்தி முரளி



சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த ஆண்டியின் நிலையில எங்கட அதி உத்தமர் பாருங்கோ...!

## கப்பலிலிருந்து தபால்பொதி இறக்கும் வேலை தாமதம்

ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போன்று ''வாதுவ'' கப்பலில் இருந்து தபால் பொதிகள் நேற்று இறக்கப் படவில்லை.

தபால் பொதிகளை எடுத்து வருவதற்கு பருத்தித்துறை சென்ற யாழ். பிரதம தபாலக ஊழியர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

தபால் பொதிகளை வெள்ளியன்று கப்பலில் இருந்து இறக்கி திங்கள் முதல் தரம்பிரித்து விநியோகிக்க ஏற்பாடாகி இருந்தது தெரிந்ததே.

''வாதுவ'' கப்பலின் அடித்தளத்தில் தபால் பொதிகள் இருப்பதாலும் —

''மாஹோ'' கப்பலில் இருந்தும் பொருள்கள் இறக்கும் வேலைகள் நடைபெற்று வருவதாலும் —

நேற்று ''வாதுவ'' கப்பலில் இருந்து தபால் பொதிகளை இறக்கமுடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஞாயிறு அல்லது திங்கட்கிழமையே தபால் பொதிகள் கப்பலில் இருந்து இறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-17-162)

## ஜனாதிபதி டி.பிக்கு தனிப்பட்ட தோல்வி

### வெரித்தாஸ் தெரிவிப்பு

மணிலா, மார்ச் 26

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் தோல்வி ஜனாதிபதி விஜேதுங்காவின் தனிப்பட்ட தோல்வி எனக் கணிக்கப்படுகிறது.

இப்படி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இந்தத் தேர்தலின் முடிவைப் பொறுத்தே அடுத்து நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின் முடிவுகள் அமையும் என எதிர்பார்க்கப்படுவதால் தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற படுதோல்வியானது ஜனாதிபதி விஜேதுங்காவுக்குக் கிடைத்த தனிப்பட்ட தோல்வியாக அமைகிறது என்று வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

தென் மாகாண சபைத் தேர்தலில் தாம் வெற்றி பெற்றால் அடுத்த தேர்தலில் தாமே மத்தியில் அரசு அமைப்போம் என ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தேர்தல் பிரசாரத்தில் கூறியிருந்ததால் —

தற்போது தாம் பெற்ற வெற்றி எதிர்கால நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் வெற்றிக்கான முன்னறிவிப்பு என பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கருத்து வெளியிட்டுள்ளது. —என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-5)

## ஒரு தொகுதியில் மட்டும் ஐ. தே. கட்சி வென்றது

கொழும்பு, மார்ச் 26

தென்மாகாணத்தில் உள்ள 21 நாடாளுமன்றத் தொகுதிகளில் 20 இல் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியது.

பலப்பிட்டித் தொகுதியில் மட்டும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டியது.

தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் தொகுதிவாரியாக அறிவிக்கப்பட்டபோது இவ் விவரம் வெளியானது (இ-எ-6)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 26

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-5)

## ஊரடங்கு நேற்றும் தொடர்ந்து அமுலில்!

கொழும்பு, மார்ச் 26

தென்மாகாணத்தில் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய நிர்வாக மாவட்டங்களில் நேற்று முன்தினம் இரவு பதினொரு மணியில் இருந்து நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணியுடன் நீக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

இதே வேளை — தேர்தல் பணிகளுக்காக தென்மாகாணம் சென்றுள்ள சுமார் 14 ஆயிரம் அரச ஊழியர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்காக ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையிலும் ரயில் சேவை நேற்று நடத்தப்பட்டது. (இ-எ)

## 2 போனஸ் ஆசனங்களையும் சேர்த்து எதிரணிக்கு 32

கொழும்பு, மார்ச் 26

தென்மாகாணசபையில் இரண்டு போனஸ் ஆசனங்களையும் சேர்த்து, பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு மொத்தம் 32 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

தேர்தலில் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெறும் கட்சிக்கு இரண்டு ஆசனங்கள் போனஸாக வழங்கப்படும் என்ற சட்டவிதிக்கு இணங்கவே, பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு இரண்டு ஆசனங்கள் கூடுதலாகக் கிடைத்துள்ளன.

நேற்று முன்தினம் நடந்த தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 55.52 சதவீத வாக்குகளைப் பெற்றது என்று அறிவிக்கப்படுகிறது.

ஐ.தே.க சார்பாக 23 உறுப்பினர்கள் தெரிவாகி உள்ளனர். (இ-எ)

## மக்கள் தீர்ப்பை ஜனாதிபதி தலைவணங்கி ஏற்கிறார்

### சிறிசேனகூரே அறிவிப்பு

கொழும்பு, மார்ச். 26

தென்மாகாண வாக்காளர்கள் அளித்த தீர்ப்பை ஜனாதிபதி விஜேதுங்கா தலைவணங்கி ஏற்றுக்கொள்கிறார்—

அமைச்சரும் ஐ.தே.க. பொதுச்செயலாளருமான சிறிசேன கூரே முன்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் தீர்ப்பைத் தாம் களிப்புடன் ஏற்றுக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

''தோல்வி எமக்கு பரிச்சயமானதொன்று இதற்கு முன்னர் நடந்த அனைத்துத்தேர்தல்களிலும் நாம் தொற்றியீட்டியது தோல்வியைத் தழுவியதன் பின்னரே'' என்று வெளியித்த திரு. கூரே, '' தோல்விக்கான காரணங்கள் பரிசீலிக்கப்படும். நாம் விட்ட தவறுகள் நிவர்த்திக்கப்பட்டு அடுத்த தேர்தலை எதிர்கொள்வோம்'' என்று கூறினார். (இ-எ-6)

## பிரான்ஸிஸ்கு தெரிவாகவில்லை

கொழும்பு, மார்ச் 26

கடந்த ஆண்டு டிசம்பரில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் நிர்வாகத்தில் இருந்த தென்மாகாண சபையை கலைப்பதற்கு ஆளும் கட்சிக்கு துணைபோன ஜி. டீ. பிரான்ஸிஸ்கு நேற்று முன் தினம் நடைபெற்ற தேர்தலில் தெரிவு செய்யப் படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

ஆகக் குறைந்த விருப்புகளை பெற்றிருந்ததாலேயே புதிய தென் மாகாண சபையில் அவர் இடம்பெற முடியாமற் போனமைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கலைக்கப் பட்ட தென் மாகாண சபையில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் உறுப்பினராக இருந்த திரு. பிரான்ஸிஸ்கு ஆளும் கட்சியினரால் கடத்தப்பட்டு ஒளித்து வைக்கப்பட்டிருந்த காரணத்தினால், தென் மாகாண சபையை அரசு கலைத்தது தெரிந்ததே. (இ-எ-6)

## அமரசிறி தொடங்கொடவுக்கு 2 லட்சம் அதிக விருப்பு வாக்குகள்

நேற்று முன்தினம் நடைபெற்ற தென்மாகாணசபை தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிட்ட அமரசிறி தொடங்கொட 2 லட்சத்துக்கு அதிகமான விருப்புவாக்குகளைப் பெற்றிருப்பதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு.தொடங்கொட காலி மாவட்டத்தில் இருந்து போட்டியிட்டார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து போட்டியிட்டவர்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை சேர்ந்த திருமதி நிருமா ராஜபக்ஷ ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பாகப் போட்டியிட்ட டலஸ் அழகப்பெருமாவும் கூடுதல் விருப்பு வாக்குகளை பெற்றுள்ளார். [இ-6]

## விமானங்கள் நோட்டம்

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று விமானங்களின் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டது.

நேற்றுக் காலை யாழ்நகரப் பகுதியை அவ்ரோ விமானம் ஒன்று வட்டமிட்டுச் சென்றது.

குடாநாட்டின் மற்றைய பகுதிகளில் அவ்ரோ விமானம் மற்றும் புக்காரா விமானம் ஆகியவை வட்டமிட்டுச் சென்றன. (இ-15-51-117-162-17)

## இலங்கைக்கான நிதி உதவிகளை தேர்தல் தோல்வி பாதிக்கலாம்

### அவதானிகள் கருத்து

கொழும்பு, மார்ச் 26

தென் மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கம் அடைந்த தோல்வி, சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து எதிர்கால நிதி உதவிகள் கிடைப்பதை பாதிக்கும் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

17 ஆண்டுகளாக பதவியில் இருந்துவரும் ஐ.தே.க. அரசாங்கத்துக்குக் கிடைத்த முதலாவது தெளிவான தோல்வி இது என்று அவதானிகள் கருத்து வெளியிட்டிருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-எ-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Sony I. C. F. SW - 7600 (Digital) Radio, Sony I. C.F. SW-1 (Digital) Radio, M - 3000 Camera Battery, M - 7 Camera Battery. எவர் விஷன் 21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7460)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பண்டம் கோழி முட்டைகள், வான் கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(29641)

மேசை, மின்தொட்டி, மர உரல், கந்தோர் மேசை, சிறிய பெரிய கட்டில்கள், அலுமாரி, கபட், கம்பளம் காப்பெற் என்பன விற்பனைக்கு உண்டு. சி. நாதன் 16/3, விதானையார் வீதி சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(4175)

முட்டையிடும் பன்ரம், வான் கோழிகளும்புறொயிலர் இறைச்சிக் கோழிகளும் விற்பனைக்குண்டு. S. ஆனந்தம், இல. 7, நிக்சஸ் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி. (30076)

நல்ல நிலையிலுள்ள Indian Raleigh சைக்கிளும் Casio PT 82, Organனும் விற்பனைக்குண்டு. இல. 8, சீனியர் லேன் (தட்டாதெரு), யாழ்ப்பாணம்.

(30075)

### தேவை

அச்சுக்கோப்பாளர் தேவை. இருபாலாரும் நேரில் வந்து சந்திக்கலாம். தானியங்கி மெஷின் மைண்டரும் தேவை. 37, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.

(7039)

### கோழிக்குஞ்சு விற்பனை

ஒரு மாத Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(30062)

### இலவச திருமண சேவை

38 வயது, விசாகம், செவ்வாயற்ற, இரகபாவம் 55, ஜேர்மன் விசாவுடன் தொழில் புரிபவருக்கு பண்பான குடும்பத்தில் மணப்பெண் தேவை மணமகன் யாழ் உள்ளார் தொடர்பு: விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி.

(30064)

### மணமகள் தேவை

கௌரவமான குடும்பப் பெற்றோர் கனடாவில் பிரஜா உரிமையுடன் நிரந்தர சேவையிலுள்ள 29 வயது, உத்தரம் (3) செவ்வாய் தோஷமற்ற, மணமகனுக்கு A/Lக்கு மேல் படித்த நற்குணமுள்ள அழகிய மணமகளைத் தேடுகின்றனர். சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும் Rajenthieram, Rtd. Accountant 165, Kopay, South, Kopay. (30028)

### மணப்பெண்கள் தேவை

யாழ் இந்து, கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த சுவிஸ் பிரஜா உரிமைபெற்ற 31வயது பூரட்டாதி, 29 வயது சதயம் தொழில்புரிபவர்களுக்கு நற்குணமும் அழகும் உடைய மணப்பெண்களைத் தேடுகின்றனர். சுவிஸில் வசிப்பவரும் விரும்பத்தக்கது விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். மே/பா 27, உதயன் சேவை நிலையம் 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

(7040)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் காலை 8-00 – 11-00 வரை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி. (30063)

### வீடியோப் பிரதிகள்

தமிழ், ஆங்கிலம், மலையாள வீடியோப் பிரதிகள் காலை 8—12 வரை, மாலை 4—6 வரை பெற்றுக்கொள்ளலாம். புது தமிழ்ப் படங்களும் உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், நல்லூர்.

[30061]

### புரொயிலர் குஞ்சு

பிறிமா புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடர் கொடுத்தவர்கள் உடன் பெற்றுக்கொள்ளவும் தேவையானோர் உடன் தொடர்பு கொள்ளவும். 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (30058)

### SPECIAL ENGLISH

Spoken English with Grammar, G A Q , G C E. (O/L) மற்றும் Special Grammar, Classesக்குரிய புதிய பிரிவுகள் இன்றும் நாளையும் ஆரம்பிக்கப்படும். R. Sivalingam (Dip-in-Eng) New English Academy, 82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

(30074)

### டாக்டர்கள் தேவை

M. B. B. S., R M P., A. M. P. தரத்திலுள்ள டாக்டர்கள் யாழ். குடாவிற்குள்ளும், வெளியிலும் (வன்னிப் பிராந்தியம்) இயங்கும் பொதுஸ்தாபனத்தில் கடமையாற்றத் தேவை. 1 4-94 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நிர்வாகி விக்லியம் ஹாவே, தனியார் மருத்துவமனை, இல. 17, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (30003)

---

சிவமயம்

## திருமணத் திருமுகம்

| மணமகன் | மணமகள் |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **பரராசசிங்கம் கணேசலிங்கம்** | **சபாரத்தினம் வசந்தி** |
| (விரிவுரையாளர் இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்) | (சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆசிரியை, வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரிக் கிளை சிறுப்பிட்டி, நீர்வேலி.) |

காலம்: 27 — 03 - 1994 ஞாயிற்றுக்கிழமை பகல் 11-11 முதல் 12-40 வரையிலான மிதுன லக்கின சுபவேளை,

இடம்: அரசகேசரிப் பிள்ளையார் கோயில், நீர்வேலி.

அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் வருக!

இருபெருங் குரவர்தம் இன்முக அழைப்பு இது

7, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

''இரத்தினவாசம்'',
இராச வீதி
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

[30047]

---

உ
சிவமயம்

## ✻ திருமண அழைப்பு ✻

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் பங்குனி மாதம் 14ஆம் நாள் (27-3-94) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6-26 மணிமுதல் 7-56 வரையிலான கன்னிலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| திரு. திருமதி இராசையா தம்பதிகளின் புதல்வன் திருநிறை செல்வன் | திரு. திருமதி கனகரத்தினம் தம்பதிகளின் திருநிறை செல்வி |
| **திருஞானசம்பந்தமூர்த்தி** | **சுமதி** |
| (பொறியியலாளர், லண்டன்) அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு லண்டனில் திருமணம் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

✻ தங்கள் நல்வரவை நாடும்: ✻

திரு. திருமதி மா. இராசையா
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

திரு திருமதி கா. கனகரத்தினம்
இளைப்பாறிய நுண் தொழில் உத்தியோகத்தர்
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

(7038)

---

உ

## திருநெல்வேலி சிவன் கோயில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

மஹா கும்பாபிஷேகம் 27 — 03 — 1994 ஞாயிற்றுக்கிழமை காலை 7-45 மணிமுதல் நண்பகல் 12-00 மணிவரையான சுபவேளையில் பிரதிஷ்டாகுரு சிவஸ்ரீ ச. யோகீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

கிரியாரம்பம்: 23 — 03 — 1994 புதன்கிழமை காலை 6 மணி முதல்

எண்ணெய்க்காப்பு:
25 - 03 - 1994 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணி முதல் 26 - 03 - 1994 சனிக்கிழமை நண்பகல் 12-00மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு நிறைவுசெய்யலாம்.

முக்கிய கிரியைகளிலும் இறைவனுக்கு எண்ணெய் சாத்தி பேரின்ப பேறு அடைவதிலும் பக்தர்கள் பங்கு கொண்டு இறையருள் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தேவஸ்தானமும்,
ஆலய நிர்வாக சபையாரும்.

திருநெல்வேலி சிவன் கோயில்,
திருநெல்வேலி.

[30045]

---

உ
யாழ். கைதடி வடக்கு

## அருள்மிகு ஸ்ரீவாலாம்பிகை அம்பாள் ஆலய சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம்

ஸ்ரீமுக வருடம் பங்குனித் திங்கள் 13ஆம் நாள்
27 — 03 1994 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் மணி 9-50 முதல் 11-02 வரை

சர்வபோதகம்: சிவஸ்ரீ நா. மகாதேவக் குருக்கள் (தர்மசாஸ்தாகுருகுல, இணுவில்)

பிரதிஷ்டா குரு:
சிவாச்சார்யமணி சிவஸ்ரீ மு. கணேசக்குருக்கள் (ஆலய பிரதமகுரு, கைதடி)

சர்வசாதகம்:
பிரம்ஸ்ரீ சோ. நிர்மலேஸ்வர சர்மா (நவாலி)

அருள் ஆசி வழங்குபவர்:
நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்

சிறப்புச் சொற்பொழிவு:
டாக்டர் K T. சபாநாதன் அவர்கள்

ஆலய பரிபாலன சபை:

| | | |
|---|---|---|
| சி. பூபாலசிங்கம், | சு. சிவம் | மு. கதிரவேலு, |
| செயலாளர். | பொருளாளர். | தலைவர். |

[30067]

---

## லயன் L. நேமன் முத்தையா
(District Chairman - Leos)

அவர்களின்
ஞாபகார்த்தமாக

### யாழ். பரியோவான் கல்லூரி லியோ கழகம்

நடத்தும் இரசிகர்களின்

## அபிமான கிரிக்கட் நட்சத்திரம் தெரிவுப் போட்டி - 1994

இரண்டாம் சுற்றில் (26-03-94 வரை) முன்னணியில் உள்ள வீரர்களின் விவரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1) | கேதீஸ்வரன் | (கொ. இ க) | 271 |
| 2) | தணிகேஸ்வரன் | (கொ. இ. க) | 253 |
| 3) | விமலன். ச | (ப யோ. க) | 233 |
| 4) | ரங்கன் | (கொ. இ க) | 111 |
| 5) | சுரேஸ் | (யா. ம. க) | 83 |

3 ஆம் சுற்றின் முடிவுகள் 01-04-94 இல் வெளியிடப்படும்.

- யாழ். பரியோவான் கல்லூரி
லியோ கழகம்

விளம்பர அன்பளிப்பு;

### கல்யாணி கிறீம் ஹவுஸ்

இல. 73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம், (30080)

---

## விசேட அறிவித்தல்

மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் கோயிலில் தேர்த்திருப்பணி வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் டி கோயிலின் தேர்த்திருப்பணியைச் சாட்டியோ அல்லது பொங்கல் பூசைகளைச் சாட்டியோ பணம், பொருள் சேர்ப்பதற்கு தனிப்பட்ட எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை அம்பிகைக்கு வழங்க விரும்பினால் டி கோயில் காரியாலயத்தில் கொடுத்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்,
தர்மகர்த்தா சபை

---

வண்ணை

## ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய இரதோற்சவ விழா

இன்று 26 - 03 - 1994
சனிக்கிழமை காலை 7-00 மணி

நாயகி நான்முகி நாராயணி கைநளினபஞ்ச சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கி என் தாயகி ஆதிஉடையாள் சரணம் அரண் நமக்கே.

தேரும் தேர் ஓட்டமும் பேரின்ப வாழ்வின் வழிகாட்டிகள்

இலங்கைத் தீவின் சிரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணை வட மேற்கு தானமுடைடு புலத்தில் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தில்
அம்பிகை
இன்று ஏற்றமுறு
தேரில்
எமைக் காக்க
வென்று
வரும் திருநளாகும்



வேண்டிய வேண்டிய வண்ணம் கிடைக்க நியானித்து நித்தம் திவ்விய தினம் இத்திருவிழாவாகும் அங்குச பாசாங்குசமும் கரும்பும் அங்கை சேர்த்த அன்னை அவளை நம் மனோரதத்தில் ஏற்றி அன்பெனும் கயிற்றால் கட்டி இழுக்கும் பாங்கில் நாம் எல்லோரும் வடம் தொட்டு ஆனந்திக்கும் தெய்வீக திருநாளாகிய இத்தேர்த் திருவிழா உற்சவங்கள் எல்லாவற்றிலும் தனிச்சிறப்புமிக்கது.

இம்முறை வண்ணை ஸ்ரீமுத்துமாரியம்மன் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயம் சிற்பகலா மணி சிற்ப இரத வித்தகன் சிற்பராஜ சிம்மன் சிற்பகலாஜோதி சிற்பச் சக்கரவர்த்தி ஸ்தபதி

ஆ. ஜீவரத்தினம் குழுவினரால்

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேரில் எழுந்தருளி இன்னல் பல தீர்த்து இரட்சிப்பதற்கு இன்று காலை ஏழு மணிக்கு தேரில் ஆரோகணிப்பதால் நாம் அனைவரும் இவ்விழாவில் அம்பிகையை தரிசித்து இஷ்ட சித்திகளை பெற்றுய்வோமாக.

பணிந்தோர்க்கு தொல்லை தீர்த்திடும்
அன்னை காமாட்சியே
எங்கள் துயர் போக்கிடுவாய்.

வீடியோ படப்பிடிப்பிலும் புகைப்படப் பிடிப்பிலும் வகைதேர்ந்தவர்கள்

### மலரும் மலர்கள்
(வீடியோ சேவை)

82 சிவப்பிரகாசம் வீதி. யாழ்ப்பாணம்

[30079]

---

## திருநெல்வேலி சிவன் கோவில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக கால தொடர் விரிவுரைகள்

27-03-94 இல் சிறப்பு சொற்பொழிவு:-
கம்பவாரிதி இ. ஜெயராஜ்
(அ. இ. க. க.)

27-03-94 முதல் 10-4 94 வரை [ 15 தினங்கள் ]
தினசரி இரவு 7 மணி முதல் 8 மணிவரை
கந்தபுராணம்
நிகழ்த்துபவர்:- 'கந்த நீதி' த. சிவகுமாரன்
[ அமைப்பாளர் காரை கம்பன் கழகம் ]

11-4-94 முதல் 25-4-94 வரை [ 15 தினங்கள் ]
தினசரி இரவு 7 மணிமுதல் 8 மணிவரை
திருவிளையாடல் புராணம்
நிகழ்த்துபவர்:-
'சிவனருட் செல்வன் ஆறு. திருமுருகன் B.A
[ ஆசிரியர் ஸ்கந்தவரோதயா கல்லூரி ]

26-4-94 முதல் 11 5-94 வரை [ 16 தினங்கள் ]
தினசரி இரவு 7 மணிமுதல் 8 மணிவரை
மகா பாரதம்
நிகழ்த்துபவர்:- கம்பவாரிதி இ. ஜெயராஜ்
[ அமைப்பாளர் அ. இ. கம்பன் கழகம் ]

சிவனடியார்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தேவஸ்தானம்
திருநெல்வேலி சிவன் கோவில்
திருநெல்வேலி.

விளம்பர அன்பளிப்பு:-
கோ. நாகேஸ்வரன்
கா. சண்முகதாசன்
நல்லூர் பிரதேச சபை
திருநெல்வேலி.

(சி-7610)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## தெற்கின் திருப்பம்

ஸ்ரீலங்காவின் எதிர்கால அரசியலைத் தீர்மானிக்கும் களமாக, திருப்புமுனையாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்ட தென்மாகாண சபைத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது.

இத்தேர்தல் குழப்பம், கலவரம் நிறைந்ததாகவே இருக்கும் என்று பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் அசம்பாவிதம் எதுவும் இன்றியே தேர்தல் அமைதியாக நடைபெற்றதாகத் தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கிறார்.

வாக்களிப்பில் தில்லுமுல்லுகளும், ஊழல்களும், மோசடிகளும் இடம்பெறும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறு நடந்ததா என்பது குறித்து உடனடியாகத் தகவல் இல்லை.

அரசியல் அவதானிகள் வெளியிட்ட கணிப்புகள், ஊகங்களுக்கு இசைய தேர்தலில் ஆளுங்கட்சி பெரும் தோல்வி அடைந்திருக்கிறது. எதிரணியினர் எதிர்பார்த்தது போலவே அமோக வெற்றி பெற்றுள்ளனர். ஐம்பத்து மூன்று ஆசனங்களில் முப்பதை கைப்பற்றியுள்ளனர்.

இந்த மாற்றம் இவ்வருடத்தில் நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தலிலும், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெற வேண்டிய நாடாளுமன்றத் தேர்தலிலும் பிரதிபலிக்கும் என்பதே பொதுவான அபிப்பிராயமாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி பதினேழு வருடங்களுக்கு மேலாக, ஸ்ரீலங்காவின் ஆட்சி பீடத்தில் அமர்ந்து அதிகாரக் கயிற்றைப் பிடித்து மக்கள் மீது சவாரி செய்துகொண்டிருக்கிறது. இந்தத் தொடர் ஆட்சியில் மக்களின் வாழ்க்கை நிலை பெரிதாக வளர்ச்சி கண்டதாக இல்லை. மாறாக குறிப்பிட்ட ஒரு சிறு வட்டத்தினர் மட்டும் சுகபோகத்தையும் சலுகைகளையும் அனுபவிக்க மிகுதியாக உள்ள பெரும்பாலான மக்கள் ஒரு நேரச் சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் ஏழ்மையில் உழல்கிறார்கள். அதன் காரணமாக ஐ. தே. க. ஆட்சி மீது மக்கள் வெறுப்படைந்திருப்பதை தெற்குத் தேர்தல் பிரதிபலிப்பதாகவும் கொள்ள வேண்டும்

இதே வேளை ஜனாதிபதி விஜேதுங்காவின் பத்துமாத கால ஆட்சியை தென்னிலங்கை மக்கள் எவ்வாறு எடைபோட்டுள்ளனர் என்பதனையும் தென்மாகாணத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

மற்றும் ஒரு கோணத்தில் பார்த்தால், ஜனாதிபதியின் பேரினவாத அணுகுமுறையை சிங்கள மக்கள் அங்கீகரிக்கவில்லை என்று கூடச் சொல்லலாம்.

ஆனால் இந்தத் தோல்வியை விஜேதுங்காவும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றுக்கொண்டு, சகித்துக்கொண்டு, மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிக்கப் போவதில்லை. இந்தத் தோல்வியை ஒரு படிப்பினையாக வைத்து ஐ. தே. கட்சி பிரதான தேர்தல்கள் இரண்டிலும் வெற்றியீட்டுவதற்கான திட்டங்களை தீட்டும், செயற்படுத்தும் என்பது நிச்சயம்.

அந்தத் திட்டங்களில் தமிழர் பிரச்சினையைக் கையாளும் அம்சம் முக்கிய இடம் பெறும். இந்த விடயத்தில் ஜனாதிபதிக்கும் ரணில்- சிறிசேன கூரே அணிக்கும் இடையில் கருத்து முரண்பாடு கூட முளைக்கலாம். ஆனால் இரண்டு பிரதான தேர்தல்களுக்கும் முன்னர் தமிழர் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு அரசின் எந்த அணியுமே விரும்பப்போவதில்லை.

இத்தகைய சூழ்நிலையில் தமிழர் பிரச்சினையை இராணுவத் தீர்வுமூலம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற விஜேதுங்கா அணிக்கா அல்லது சமாதான வழியில் தீர்க்க வேண்டும் என்ற ரணில் அணிக்கா வாய்ப்பு ஓங்கும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இரண்டு அணிகளும் ஒன்று சேர்ந்து இராணுவத் தீர்வு என்ற முடிவுக்கு வந்தால் கூட ஆச்சரியப்பட முடியாது.

# பிரேமா நியமித்த குழுவின் சிபார்சுகளை ஏற்க முடியாது!

## ஆரியரத்ன தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

"அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சுகளை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அவற்றுக்கு எதிராக சவால் விடவும் நான் தயார்"

"சர்வோதய" இயக்கத் தலைவர் கலாநிதி ஏ. ரீ. ஆரியரத்ன இவ்வாறு கூறினார்.

அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் பதிவு தொடர்பாக அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார். புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை அமைச்சர் பி. தயாரத்ன கலந்துரையாடலுக்குத் தலைமை வகித்தார்.

கலாநிதி ஆரியரத்ன மேலும் கூறியதாவது!

கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக சர்வோதய இயக்கம் ஒதுக்கப்பட்டது. நீதி நியாயமற்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது அந்த நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார். (த-எ)

## ஐ. நா. பாதுகாப்பு சபையில்

# நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்?

## அமெரிக்கா யோசனை கூறியுள்ளது

வாஷிங்டன், மார்ச் 26

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் உள்ள நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை 20 ஆக அதிகரிக்கும்படி அமெரிக்கா யோசனை தெரிவித்திருக்கிறது.

தற்போது ஐ. நா. பாதுகாப்புச் சபையில் 5 நிரந்தர உறுப்பு நாடுகள் அங்கம் வகிக்கின்றன

மேலும் ஐந்து நாடுகளை நிரந்தர உறுப்பு நாடுகளாக்க வேண்டும் என்று யோசனை தெரிவித்துள்ள அமெரிக்கா, ஜப்பானும், ஜேர்மனியும் புதிய நிரந்தர உறுப்பு நாடுகளின் பட்டியலில் இடம் பெற வேண்டும் என்றும் கூறியுள்ளது.

சேர்க்கப்பட வேண்டிய ஏனைய நாடுகள் எவை என்பது பற்றிய விபரங்களை அமெரிக்கா வெளியிடவில்லை.

பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்துவதுபற்றி முதற்தடவையாக இப்போதுதான் அமெரிக்கா தனது கருத்தை வெளியிட்டுள்ளது. (த-எ)

## ரூ 50 லட்சம் நஷ்டஈடு கோரி வழக்கு

கொழும்பு, மார்ச் 26

கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் உயிரிழந்த ஒருவரின் மனைவி, 50 லட்சம் ரூபா நட்டஈடுகோரி, தமது கணவனுக்கு சிகிச்சை அளித்த வைத்திய நிபுணர் மீதும் அந்தத் தனியார் மருத்துவமனை மீதும் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்வழக்குத் தொடர்ந்துள்ளார்.

அஸிரி மருத்துவமனை நிர்வாகத்தினரும், வைத்திய நிபுணர் பி.ரி. டீ சில்வாவின் கவனயீனம் கடமையைச் சரியாகச் செய்யாமை ஆகிய காரணங்களினால் தமது கணவர் கடுகேமகே ஊமி உயிரிழந்தார் என்று மனுதாரரான திருமதி தோம்பே ஆராச்சிகே பிரேமாவதி தமது மனுவில் தெரிவித்திருக்கிறார்.

வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி நடக்கும் என்று மாவட்ட நீதிபதி ஏ.எம். சோமவன்ஸ உத்தரவிட்டார். (இ-எ)

## வடக்கு - கிழக்கு

# அமைச்சரவை ஆராயும் அகதிகள் பிரச்சினையை

கொழும்பு, மார்ச் 26

வடக்கு - கிழக்கு மாகாண அகதிகளின் உணவு, புனர்வாழ்வு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதற்கான அமைச்சரவை இணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி கொள்ளுப்பிட்டி இராமோதய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்தினா, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோ, மாவட்டங்களின் அரச அதிபர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள். (த-3)

# துணைவேந்தருக்கு பாராட்டு விழா

## சனசமூக நிலைய சம்மேளனம் ஏற்பாடு

பேராசிரியர் அ. துரைராசாவின் சேவைகளைப் பாராட்டுமுகமாக யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள சேவை நலம் பாராட்டு விழா நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

சனசமூக நிலையங்களின் சம்மேளன தலைவர் திரு. வை. செகராசசிங்கம் தலைமையில் நடைபெறும் விழாவில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு கரிகாலன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நல்லை ஆதீன குரு முதல்வர் தவத்திரு. சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், வண. பிதா திரு. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார், யாழ். மாவட்ட பேராயர் அதிமேதகு கலாநிதி எஸ் ஜெபநேசன், திருமதி கோகிலா மகேந்திரன், பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா உட்பட பலர் துணைவேந்தரை பாராட்டி உரையாற்றுவர்.

நிகழ்ச்சியில் நடனம், நாடகம் ஆகியவையும் இடம் பெறும் (த)

## மைலந்தனை படுகொலை வழக்கு மேல் நீதிமன்றுக்கு

கொழும்பு, மார்ச் 26

மைலந்தனைப் படுகொலை வழக்கை பொலன்னறுவை நீதிவான் மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தி உள்ளார்.

மைலந்தனையில் 9 - 8 - 92 இல் 33 தமிழர்களைக் கொலை செய்ததாகவும் —

12 பேரை கொலை செய்ய முயன்றதாகவும் — 24 இராணுவத்தினருக்கு எதிராக நடத்த இந்த வழக்கில் மூன்று எதிரிகள் மட்டும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய 21 எதிரிகளையும் மேல் நீதிமன்ற விசாரணைக்கு நிற்குமாறும் —

இவர்களை தொடர்ந்து தடுத்து வைக்குமாறும் — பொலன்னறுவை நீதிவான் உத்தரவிட்டார். (இ-3)

## பிரியா விடை

யாழ்ப்பாணம், மார்ச் 26

துணைவேந்தர் பேராசிரியர் துரைராசாவுக்குப்பல்கலைக்கழக சமூகத்தினரும், நலன் விரும்பிகளும் ஏற்பாடு செய்துள்ள பிரியாவிடை வைபவம் இன்று மாலை 6 மணிக்கு நடைபெறும் (த)

# தமிழீழ மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த கிராமிய பாசறைகள்

## யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

தமிழீழ மக்கள் ஒவ்வொருவரின் பாதுகாப்பிலும், வாழ்க்கைத்தர உயர்விலும் எமது தேசியத் தலைவர் அக்கறையாக இருக்கிறார். அதன் ஒரு பக்கம் தான் கிராமியப் பாசறைகள்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி.

கைதடி நாவற்குழி தெற்கு, மறவன்புலம் மேற்கு ஆகிய கிராமங்களில் 3 நாட்கள் நடைபெற்ற கிராமியப் பாசறையின் இறுதி நாள் நிகழ்வில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தென்மராட்சி கோட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. வாணன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது.

இந்த கிராமங்களின் மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. இந்த வாழ்வு வளமுடையதாக வேண்டும் என்பதற்காகவே இப்படியான பாசறைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பாசறையின் போது இக்கிராமத்து மக்கள் ஏன் பின் தங்கிய நிலையில் உள்ளனர் என்பது மூன்று நாள் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது இதனை மாற்ற உடனடியாகவும் நீண்ட கால நோக்கிலும் பல திட்டங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களை முன்னெடுத்துச் சென்று இக்கிராமத்தை முன்னேற்ற ஒவ்வொருவரும் மக்கள் துடன் எங்களோடு சேர்ந்து உழைக்க வேண்டும்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரையாற்றிய இக்கிராமத்தின் ஒரே ஒரு பாடசாலையான ஸ்ரீமகா விஷ்ணு வித்தியாலயத்தின் அதிபர் திரு வே. இராமன் தமது உரையில் கூறியதாவது:

தமிழீழம் மலரும் போது பூரணத்துவம் வாய்ந்த சமுதாயமாக இருக்க வேண்டும். போராடி முடித்த...

பிரச்சினைகளைத் தீர்ப்பதாயின் இதற்கு நீண்டகாலம் பிடிக்கும். இதைத் தவிர்க்க இப் போராட்ட காலத்திலேயே இவற்றை கண்டறிந்து தீர்க்க எமது போராளிகள் முன்வந்துள்ளனர். இவர்கள் இந்த கிராமத்தை துருவித் துருவி ஆராய்ந்திருக்கிறார்கள் ஒவ்வொருவரின் தேவையையும் உணர்ந்திருக்கிறார்கள். இதற்காக பல திட்டங்களையும் போட்டிருக்கிறார்கள் என்றார்

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. குகை, அரசியல் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாசிரியர் திரு. அரசண்ணா, மகளிர் அமைப்பு அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி ரதி ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

இக்கூட்டத்திற்கு முன்னர் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி ஈட்டியோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. ...

# அன்னை பூபதி நினைவு சிரமதான நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 26

அன்னை பூபதி நினைவு நாட்களையொட்டி நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளில் இன்று சிரமதானம் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

★ கைதடி மேற்கு உதயநகரில் வீதி அப்புரவு செய்தல்.

★ சரசாலை மட்டுவிலில் கெருடாவில் ராஜநீதி வீடமைப்பு திட்டம் அப்புரவும் பணி.

★ வரணியில் மாவிரர் ச.ச. நிலையம் புனரமைத்தல்.

★ பளை தம்பகாமம் மூன்மைபடி ச. ச. நிலையம் புனரமைப்பு. (த-5)

## நாடாளுமன்றால் ஜனாதிபதி தெரிவு:

# சுதந்திரக் கட்சி எம். பிக்கள் வாக்களிக்க மாட்டார்கள்

கொழும்பு, மார்ச் 26

நாடாளுமன்றத்தினால் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் முறையை அறிமுகப்படுத்தும் சட்டத்துக்கு ஆதரவாக சுதந்திரக் கட்சி எம்பிக்கள் நாடாளுமன்றத்தில் வாக்களிக்கமாட்டார்கள்

சுதந்திரக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றம் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்யும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கும் என்று அரசாங்கம் கூறுகின்றது சுதந்திரக்கட்சி எம்பிக்களின் ஆதரவு இன்றி இச்சட்டம் நிறைவேற்றப்பட முடியாது.

மக்களால் தெரிவு செய்யப்படக்கூடியதான ஜனாதிபதித் தேர்தலை நடத்தும்படி அரசாங்கத்தை நாம் கோருவோம். அரசு அப்படி நடத்தாவிட்டால் நாம் நாடு தழுவிய கலவரத்தை ஆரம்பிப்போம் — என்றும் சிறிமாவோ குறிப்பிட்டார். (த-எ)

## கற்பிட்டி தாக்குதலின் போது

# கடற்படை ரோந்துப் படகு உதவிக்கு செல்ல மறுப்பாம்!

கொழும்பு, மார்ச் 26

கற்பிட்டி கடலில் இனந்தெரியாத நபர்களினால் சிங்கள மீனவர்கள் தாக்கப்பட்டபோது அந்த வழியால் வந்த இலங்கை கடற்படையின் ரோந்துப் படகு உதவிக்கு வர மறுத்து விட்டதாக அத்தாக்குதலில் உயிர் தப்பிய மீனவர்களில் ஒருவரான தெஹிபளகே அன்ரனி பெரேரா தெரிவித்தார்.

கடந்த பதினான்காம் திகதி அத்தாக்குதல் இடம்பெற்றது

அன்ரனி இப்போது சிலாபம் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நடுக்கடலில் தாக்குதலுக்குள்ளாகி தத்தளித்த நேரத்தில் உதவிக்கு அழைத்தும் அந்த வழியால் வந்த கடற்படை ரோந்துப்படகு உதவ வராதது தமக்கு கவலையை ஏற்படுத்தியதாகவும் அன்ரனி தெரிவித்தார். (த-எ)

# சர்வதேச விருதை தடுத்த யாழ். தபால் தாமதம்!

யாழ்ப்பாணம், மார்ச் 26

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் அபிவிருத்தி சம்பந்தமான பல அமைப்புகளில் முக்கிய பதவிகளை வகிக்கும் கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதனுக்கு "எஸ்காப்"பின் (ESCAP) "குளோபல் 500" விருது கிடைத்துள்ளது

ஆனால் அவர் அந்த விருதைப் பெறமுடியாமல் தடுத்துவிட்டது யாழ்ப்பாணத்திற்கான தபால் சேவை!

சுற்றாடல் பாதுகாப்புக்கு பெயர்பெற்ற "எஸ்காப்" அமைப்பு கதிர்காமநாதனின் சேவைகளை மெச்சி அவரை இவ்விருதுக்குத் தெரிவுசெய்திருந்தது.

தமக்குக் கிடைத்த விருதினை பெற்றுக்கொள்ள விருப்பம் உண்டா என்று கடந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் உறுதிசெய்யுமாறு அவரை "எஸ்காப்" நிறுவனம் கேட்டிருந்தது. ஆனால் நவம்பர் மாதம் முதலாம் திகதி அனுப்பிவைக்கப்பட்டிருந்த பிரஸ்தாப கடிதம் பெப்ரவரி பிற்பகுதியிலேயே கிடைத்தது. அதனால் தமக்குக் கிடைத்த மதிப்பிடற்கரிய விருதை நேரில் சென்று பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை அவர் இழந்துவிட்டார்.

இதே போல ஐ நாவின் காடு வளர்ப்பதற்கான சர்வதேச அரசாங்கங்கள் குழுவின் (UN Inter Governmental Committee for Desertation) செயற்பாடுகளின் பார்வையாளராகக் கலந்துகொள்ளக் கிடைத்த வாய்ப்பையும் தபால் தாமதம் காரணமாக கலாநிதி கதிர்காமநாதன் இழந்துவிட்டார்.

இதற்கு முன்னரும், கலாநிதி கதிர்காமநாதன் ஐ. நா. அமைப்புகளின் பல மாநாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பையும் தபால் தாமதத்தால் இழந்திருந்தார்.

சுற்றாடல் அபிவிருத்திக்கான தென்கிழக்காசிய ஆணைக்குழுவின் இயக்குநரான கலாநிதி கதிர்காமநாதன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நியூயோர்க்கில் நடைபெறும் "நீண்ட காலம் நிலைக்கக்கூடிய அபிவிருத்தி" சம்பந்தமான உலக மாநாட்டில் கலந்துகொள்ளுமாறும் அழைக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமான கடிதம் சென்ற வருட மத்தியிலேயே கிடைத்து விட்டது. (ஞ-த)

## நாவற்குழி தெற்பெலி முகாம்களில்

# மலசலகூட வசதி செய்ய 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

நாவற்குழி தெற்பெலி இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மலசலகூட வசதிகளை செய்வதற்காக 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் ஒதுக்கப்பட்டுள்ள மேற்படி நிதியைக் கொண்டு மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களைத் தயாரிக்குமாறு யாழ். செயலக திட்டப் பணிப்பாளரை யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்

இதே வேளை —

யாழ் செயலக இருந்த வேலைகளுக்கு மேலும் 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

# 250 பெட்டி மலத்தியோன் இங்கு அனுப்பி வைக்கப்படும்

250 பெட்டி மலத்தியோனை இங்கு அனுப்பி வைக்க மலேரியா தடுப்பு இயக்கப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ் அரச அதிபர் திரு கா மாணிக்கவாசகர் கொழும்பில் இருந்து அறிவித்துள்ளார்.

ஒவ்வொன்றும் 50 கிலோகிராம் நிறையுடைய 250 பெட்டி மலத்தியோனும் விரைவில் கப்பல் மூலம் இங்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் —

மலத்தியோனை கப்பல் மூலம் எடுத்துவரப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அனுமதி வழங்கியுள்ளார் என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

## பாண்டிச்சேரியில் அ. தி. மு. க. ஊழல் மகஜர்

புதுச்சேரி, மார்ச் 26

பாண்டிச்சேரி மாநில இந்திராகாங்கிரஸ் அரசுக்கு எதிராக 37 ஊழல் குற்றச்சாட்டுகளைக் கொண்ட மகஜர் ஒன்றை அ.தி.மு.க. ஆளுநர் சென்னாரெட்டியிடம் சமர்ப்பித்தது.

தமிழகத்தில் அ. தி. மு. க. அரசுக்கு எதிராக இந்திரா காங்கிரஸ் சமர்ப்பித்த ஊழல் குற்றச்சாட்டு மனுவுக்குப் போட்டியாக இந்த நடவடிக்கையை அ. தி. மு. க. புதுச்சேரியில் மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## அம்பாந்தோட்டை மாவட்ட முடிவு

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொ. ம. ஐ. மு. ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 389 வாக்குகளை பெற்றது. அந்த முன்னணியைச் சேர்ந்த 8 உறுப்பினர்கள் மாகாண சபைக்குத் தெரிவானினர்,

96 ஆயிரத்து 118 வாக்குகளைப்பெற்ற ஐ. தே. கவிலிருந்து 6 உறுப்பினர்கள் தெரிவானினர்.

ந ச ச கட்சி 2,703 வாக்குகளும் சுயேச்சைக் குழு 2,650 வாக்குகளும் பெற்றன. உறுப்பினர்கள் எவரும் தெரிவாகவில்லை

## செயன்முறை தேர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். இந்துக் கல்லூரியில் இயங்கும் கணித, விஞ்ஞான மாணவர்களுக்கான இறுதியாண்டுப் பரீட்சை, உடற்கல்வி முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சை ஆகிய கற்கை நெறிகளைப் பயிலும் தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான செயன்முறைப் இன்றும் நாளையும் காலை 8-30 மணி முதல் மேற்படி கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக்குரிய உபகரணங்களுடன் தோற்றும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (க)

## வீதி திருத்த வேலைக்கு 800 தார் பரல்

யாழ்ப்பாணம், மார்ச் 26

குடாநாட்டில் வீதித்திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக 800 தார் பரல்களை அனுப்பி வைக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

விரைவில் இந்தத் தார் பரல்கள் கப்பல் மூலம் அனுப்பப்படும் என யாழ் அரச அதிபர் செயலகத்துக்கு அறிவித்துள்ளார். (த-5)

## தொலைக்கல்வி மொடியூல்கள்

தேசிய கல்வி நிறுவகத்தில் இருந்து எடுத்துவரப்பட்ட தொலைக் கல்விக்கான 'மொடியூல்'களை சம்பந்தப்பட்ட போதனாசிரியர்கள் எதிர்வரும்28ஆம்திகதி திங்கள் இழமை காலை 10மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. (த)

## கருத்தரங்கு

யாழ். இந்து பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலாநாள் கருத்தரங்கு இன்று சனி பிற்பகல் 3மணிக்கு இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

"புதிய உலக ஒழுங்கை புரிந்து கொள்ளல்" என்ற தலைப்பில் தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு வே. பாலகுமாரன் உரையாற்றுவார். (த)

வீட்டினில் எங்கும் வேளாண்மை செய்வோம் - அதில் வேண்டிய பலனை வாழ்வினில் காண்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவு செய்யாத 9 தமிழர்கள் மாத்தளையில் கைது!

கொழும்பு, மார்ச் 26
மாத்தளையில் இருபெண்கள் உட்பட 9 தமிழர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்முனையைச் சேர்ந்த இவர்கள் மாத்தளை மாவட்டத்துக்கு வந்த சமயம் தமது பெயர்களை பதிவு செய்யாமல் தங்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் குறித்து பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சுவரொட்டி அகற்றியவர்களை கைது செய்யத் தவறினார் அதிகாரிக்கு இடமாற்றம்

கொழும்பு, மார்ச் 26
பிரதம மந்திரியின் விஜயம் பற்றி உடுகம எங்கும் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை அகற்றிய நபர்களைக் கைது செய்யத் தவறியதற்காக உடுகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பலிந்த வண்டாரா காலி நகருக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதனை தொடர்ந்து உடுகம பொலிஸ் பொறுப்பதிகாரியாக இன்ஸ்பெக்டர் சார்ள்ஸ் வன்னியாராச்சி நியமிக்கப்பட்டார். (த-எ)


றயனி வீடியோ சென்ரர்

பப்பா வீதி, மாகியம்பதி,
சண்டிலிப்பாய்.

பழைய, புதிய வீடியோ கசெட்டுகள் வாடகைக்கு உண்டு.

(சி-30088)



யாழ். மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
ஆண்டுப் பொதுக்கூட்டம்

27-03-1994 காலை 9-30 மணி
அங்கத்தவர்கள் தவறாது சமுகம்தருக

(30078)



ENGLISH SHORT-HAND AND TYPEWRITING CLASSES

The Methodist Church Jaffna Circuit will Conduct a five Months Course Free of Charge.

Females below 25yrs of age may send in their Applications in English in their own handwriting to reach C. L. S. Book Shop. 570, Hospital Road, Jaffna on or before 10-04-1994.

METHODIST CHURCH
JAFFNA CIRCUIT.

[C-7465]


## மரண அறிவித்தல்கள்

### கணபதி கண்ணகி

தெல்லிப்பளை கிழக்கு கோயிற் புலத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் மயிலணி சுன்னாகத்தை தற்போது வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி கணபதி கண்ணகி காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கணபதியின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-3-94) சனிக்கிழமை பி.ப 1 மணிக்கு மயிலணி சுன்னாகத்தில் நடைபெற்று மல்லாகம் கட்டுப்பிட்டி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

மயிலணி,
சுன்னாகம்

(7043)

### கந்தையா கணபதிப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை 25-03-94 அன்று அகால மரணமானார்

இவர் திலகத்தின் அன்புக் கணவரும் சிவதாசன், கவிதாசன், கண்ணதாசன் வரததாசன், பாரதிதாசன், றஜினி சுகந்தினி, ஜெந்தினி (இந்தியா), சிவாஜினி, பிறேமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அற்புதமலர், காலஞ்சென்ற செல்வரத்தினம், சிவகலை கமலேந்திரகுமார், சந்திரமோகன் (C.M. சுகந்தினி பதிமையாளர்), விக்னேஸ்வரன் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் புவிதாசன், சிவபாலன் முகுந்தினி, லுகிதா, பவிதா, தாட்சாயினி, விஜிதரன், சுஜிதரன், சுதாதரன், பபிதரன், கீதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. கண்ணதாசன்
(மகன்)

113, பாங்சால் வீதி,
பிறின்ஸ் பேக்கரி அருகில்,
குருநகர்.

(30082)

## பாடசாலைகளில்

உடுவில் மகளிர் கல்லூரி ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

தெல்லிப்பளை நந்தை செல்வா தொடக்க நிலைப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் மல்லாகம் விசாலாட்சி பாடசாலை மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். (த-143)

## நரோமா கப்பல் பயணிகளுக்கு

எதிர்வரும் 29 ஆம் திகதி 'நரோமா' கப்பலில் செல்லவிருந்தோர—யாழ் செயலகத்தில் இரண்டாவது பட்டியலில் பெயர் பதியப்பட்டவர்கள் அடுத்த மாதம் 7 ஆம் திகதி பிரயாணம் மேற்கொள்ள பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதி கிடைத்துள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை மேற்குறிப்பிட்ட திகதியில், பயண ஆயத்தங்களுடன் பருத்தித்துறை துறைமுகத்தில் சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ப. இலகநாயகம் கேட்டுள்ளார். (இ-162)

## மாட்டுவண்டில் சவாரிச்சங்கம்

யாழ்ப்பாணம், மார்ச். 26
"மாட்டு வண்டில் சவாரி சங்கம் அமைப்பதற்கான கூட்டமொன்று கோண்டாவில் அரசியல் துறை மாவட்டச் செயலகத்தில் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் யாழ் மாவட்டத்திலுள்ள சகல சவாரி மாட்டு உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக் கொள்கின்றது. [இ]


விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

I st in COM
கணக்கியல்
திரு. S.K. பிரபாகரன் B.B.A.

★ வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.
★ நேர அட்டவணை நேரில் பெறவும்.

[சி/7606]


# உடற்பயிற்சிப் போட்டிகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் அபிவிருத்திக்குழு நடத்தும் உடற்பயிற்சிப் போட்டி இன்று சனிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு இ. லோகநாதன் தலைமையில் நடைபெறும்.

15 கல்விக்கோட்டங்களிலிருந்து 2500 மாணவர்களைக் கொண்ட 72 அணிகள் கலந்து கொள்ள இருக்கின்றன.

பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இறுதிப்போட்டியில் பிரதம அதிதிகளாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் செல்வி. நிலைவதி பெரியதம்பியும், திரு. க. கந்தசாமியும் கலந்து கொள்வார்கள் சிறப்பு விருந்தினராக தமிழீழக் கல்விக் கழகத் துணைப்பொறுப்பாளர் திரு. வே. பாலகுமாரன் கலந்து கொள்வர்.

இப் போட்டியில் முதலிடங்களைப் பெறும் 15 வயது ஆண் அணிக்கு வெப். கேணல் சார்ள்ஸ், 15 வயது பெண் அணிக்கு லெப். கேணல் பாமா, 17 வயது ஆண் அணிக்கு கப்டன் பண்டிதர், 17 வயது பெண் அணிக்கு மேஜர் சோதியா, 19 வயது ஆண் அணிக்கு லெப். சந்தர் 19 வயது பெண் அணிக்கு 2 ஆம் லெப் மாலதி ஆகியோரின் நினைவாக வெற்றிக் கேடயங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இந் நினைவுக் கேடயங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பும், கலைகுலி, எழிலகம் ஆகிய நிறுவனங்களும் வழங்குகின்றன.

இவ் விழாவில் பல பாடசாலை மாணவர்களின் குழுக்கள் இணைந்து வழங்கும் இசைநிகழ்ச்சி சிறப்பம்சமாக இடம்பெறும். (க)

# விளையாட்டு நிகழ்வுகள்

கல்லூரி மற்றும் கழக அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டித் தொடர்களில் இன்றும் நாளையும் நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

**இன்று**

★ காலை 9. மணி முதல்:- சென்றலைட்ஸ் நீல அணி எதிர் மானிப்பாய் பரிஷ் அணி—50 ஓவர்கள் ஆட்டம்—மானிப்பாய் இந்து மைதானத்தில்.

★ காலை 8.30 மணி முதல்:- யாழ். இந்து அணி எதிர் ஹட்லி அணி — ஒரு நாள் ஆட்டம்— யாழ். இந்து மைதானத்தில்.

★ காலை 9.00 மணி முதல்:- சென். பற்றிக்ஸ் அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி—ராஜன் கதிர்காமர் கிண்ணத்துக்கான 50 ஓவர்கள் ஆட்டம்—யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்.

**நாளை**

★ காலை 9.00 மணி முதல்:- யாழ். பல்கலைக் கழக அணி எதிர் பற்றிஷியன் வி. க. அணி - 50 ஓவர்கள் ஆட்டம் — பல்கலைக் கழக மைதானம்.

★ காலை 8.30 மணி முதல்:- ஸ்கந்தா அணி எதிர் மகாஜனா அணி — ஒரு நாள் ஆட்டம்—ஸ்கந்தா மைதானத்தில். (ட)

★ ★ ★

கரவெட்டி பிரதேச செயலர் பகுதியில் உள்ள விளையாட்டு கழகங்களுக்கான விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும். [க-162]

★ ★ ★

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டு அமைச்சில் பதிவு செய்த கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கும் நாளை பிற்பகல் 2 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும். [த]

★ ★ ★

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் இன்று சனி காலை 8 மணிக்கு ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டிகளும் பிற்பகல் 3 மணிக்கு பெண்களுக்கான எல்லே விளையாட்டு போட்டிகளும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இதேவேளை 9 விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடரின் முதலாவது சுற்றும் சுழிபுரம் விக்டோறியா கல்லூரி மைதானத்தில் தற்போது நடைபெறுகின்றது. [த-175]

★ ★ ★

சுதுமலை தெற்கு ஆவணக் கோட்டை அம்பாள் ச. ச. நிலையத்தின் வெள்ளி விழாவை ஒட்டி இன்று சனி மாலை 4 மணிக்கு தாச்சி சுற்றுப் போட்டிகள் நிலைய மைதானத்தில் ஆரம்பமாகும்.

இன்றைய ஆட்டத்தில் பங்கு பற்றும் "பி" பிரிவு அணிகள் வருமாறு!

கல்வியங்காடு கலைவாணி அணி எதிர் சுதுமலை நாவலர் அணி.

★ இணுவில் அண்ணா அணி எதிர் மல்வம் செம்பதிர் அணி. (த)

# ஆலயங்களில்

பன்னாகம் விசவத்தனை முருக மூர்த்தி கோவில் தேர்த் திருவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்:

ஐம்பதினாயிரம் ரூபா செலவில் புதுமெருகூட்டப்பட்ட அழகிய தேரில் முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக தேரில் பவனிவந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்; (க-28)

★ ★ ★

ஆனைக்கோட்டை நாலுகால் மடம் ஞானவைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவப் பெரியபுராணத்தொடர் விரிவுரைப் பூர்த்திவைபவம் இன்று இரவு நடைபெறும்.

விரிவுரை நிகழ்த்திய திரு. மு.சி. தயாளனை "புத்தொளி" ந. சிவபாதம் பொன்னாடை போர்த்திப் பாராட்டுவார். அறிவொளி ஐக்கிய கழகத்தின் ஆதரவில் பட்டிமன்றமும் இடம்பெறும். (க-162)

★ ★ ★

கொழும்புத்துறை மணியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் - ஐயனார் கோவில் மாதாந்த திருவிளக்குப் பூசை இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு விசேட அபிஷேகம் பூசை ஆராதனையுடன் நடைபெறும். (த-30)

★ ★ ★

வல்லை ஸ்ரீ வைத்தீஸ்வர ஆலயத்தில் இரதோற்சவம் இன்று நடைபெறும். தீர்த்தோற்சவம் நாளை வல்லை தீர்த்தக் கடற்கரையில் நடைபெறும். (த-155)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சிவன்கோயில் தேர்த்திருவிழா இன்று காலை 8 மணிக்கு நடைபெறும். (த-111)

★ ★ ★

கொய்யாத் தோட்டம் ஸ்ரீ ஞான செல்வ விநாயகர் ஆலய அலங்கார உற்சவத்தில் இன்று மாலை 6 மணிக்கு "தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு" என்ற தலைப்பில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் சொற்பொழி[வாற்றுவார்:] (த-17)

★ ★ ★

கன்னாகம் தாளையடி ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் கோயில் இரதோற்சவம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். தீர்த்தோற்சவம் நாளை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

இணுவில் அருள்மிகு சிவகாமி அம்பாள் கோயில் இரதோற்சவம் இன்று சனிக்கிழமை காலை நடைபெறும். (த-89)

## இன்று

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத பீட வேதாந்த மடத்தில் மாதாந்தப் பூரணை தினத்தன்று பிற்பகல் 3-30 மணிக்கு சொற்பொழிவுகளை நடத்த குருபீடாதிபதியினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று இடம்பெறவுள்ள சொற்பொழிவில் "சிவசமயக் கல்" என்ற பொருளில் திரு. மா. வேதநாதன் எம். ஏ. உரையாற்றுவார். (த)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் மாதாந்த பூரணை கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நிலைய அரங்கில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி எஸ். தாச்சியார் "அகவாழ்வு அறவாழ்வு" என்ற பொருளில் உரையாற்றுவார். (த-30-17)

★ ★ ★

மகேஸ்வரா தடுப்புவார கருத்தரங்கு ஒன்று, இன்று சனிக்கிழமை 4.30 மணிக்கு கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாநகர சுகாதார பகுதியை சேர்ந்தவர்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். (த-17)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய திப இசை அரங்கில் இன்று மாலை 6-30 மணிக்கு செல்வி அருந்ததி சங்கரலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். (த)

★ ★ ★

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவைக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய சாரணர் குழு ஏற்பாடு செய்துள்ள சாரணர் ஸ்தாபகர் பேடன் பவல் தினம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். சாரணர் பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும். (த)

★ ★ ★

ஏழாலை மேற்கு உதயசூரியன் அறிவகம் - சனசமூக நிலையத்தின் நூல் நிலையத் திறப்புவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அறிவகத் தலைவர் திரு. க. சிவலிங்கம் தலைமையில் நடைபெறும். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க-45)

## எதிரணிக்கு 54.52 சதவீத வாக்குகள்

கொழும்பு, மார்ச் 26
நடந்து முடிந்த தென் மாகாணச் சபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 54.52 சதவீத வாக்குகளையும் ஐக்கியத் தேசியக் கட்சி 43.91 வாக்குகளையும் பெற்றுள்ளன. (க)

## ராஜீவை தாக்கியவர் தோல்வி

கொழும்பு, மார்ச் 26
1987 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை கொழும்பில் கைத்துப்பாக்கியால் தாக்கிய கடற்படைச் சிப்பாய் றோகண டி சில்வா தென்மாகாண சபைத் தேர்தலில் படுதோல்வி அடைந்தார்.

பூமி புத்திர இயக்கத்தின் சார்பில் அவர் தேர்தலில் போட்டியிட்டார். (இ-5)

## செட்டிகுளம் பிரதேச செயலர் கைது

கொழும்பு, மார்ச் 26
வவுனியா மாவட்டம் — செட்டிகுளம் பிரதேசத்தின் புனருத்தாரணப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை தவறான வழியில் கையாடியதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று தொடர்பாக செட்டிகுளம் பிரதேசச் செயலாளர் திருமதி. ஜே. வி. திருநாவுக்கரசு கைது செய்யப்பட்டார்.

கொழும்பில் இருந்து வந்த இரகசியப் பொலீஸ் குழுவினரால் கடந்த 23 ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-6)

---

### பேரினவாதக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

எதிர்க்கட்சியின் தரப்பிலான பிரசாரத்தைப் பொறுப்பேற்று நடத்திய திருமதி சந்திரிகா குமாரணதுங்காவுக்கு தேர்தல் முடிவு பெரிய வெற்றியாகும்.

வயது முதிர்ந்த திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவின் வாரிசு சந்திரிகாதான் என்பதையும் இத் தேர்தல் எடுத்துக் காட்டியுள்ளது.

இனவாதத் துரும்பை தேர்தலில் பயன்படுத்த ஜனாதிபதி விஜேதுங்கா முடிவு செய்தார். அதனைப் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் நிராகரித்து விட்டனர்.

தென் மாகாணத்தில் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராகவும் பலர் வாக்களித்துள்ளனர் தென் மாகாணத் தேர்தல் முடிவு, எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். கடந்த ஆண்டு டிசம்பரில் எதிர்க்கட்சியினர் வசம்இருந்த தென் மாகாண சபையை ஆளும் கட்சி திட்டமிட்டுக் கலைத்தது. இப்போது மக்கள் ஒரு லட்சத்துக்கு அதிகமான வாக்குகளால் கூடுதல் பெரும் பான்மையுடன் தென் மாகாணசபைக்கு எதிரணியைத் தெரிவு செய்துள்ளனர் — என்று கூறியுள்ளார்.

ஆளும் கட்சியின் இனவாதத்துக்கும் —

சிறுபான்மையின மக்களைப் புறக்கணிக்கும் போக்குக்கும்- தென்பகுதி சிங்கள மக்கள் சாவு மணி அடித்துள்ளனர் என்று —

கொழும்புத் தமிழ்க் கட்சிகள் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி கூறியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இனவாதம், மதவாதம், திசை திருப்புதல் போன்ற பல தந்திரங்களை சிங்கள மக்கள் புறக்கணித்து மிதவாத சக்திகளை ஆதரித்திருப்பதாக தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி கருத்து வெளியிட்டுள்ளது.

ஆளும் கட்சியின் தேர்தல் தோல்வியை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் வரவேற்றுள்ளது. (அ-எ-இ-5)

## மூன்றாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி தனபாலன் டோறிஷா

தனபாலன் — குமுதினி தம்பதிகளின் செல்வப் புதல்வி டோறிஷா இன்று 26-03-1994இல் தனது மூன்றாவது பிறந்த தினத்தை வெகுவிமரிசையாக கனடாவில் ரொரென்டோவில் கொண்டாடுகிறார்.

இவரை ரொரென்டோவில் இருக்கும் அப்பா, அம்மா, ரவி மாமா, சித்தப்பாமார் சித்தி, சுவிஸில் இருக்கும் அப்பன் மாமா, மாமி, தஜீவன் மச்சான், மாமாமார், மாமி, பெரியம்மா, அண்ணா, அக்கா, மச்சான், மற்றும் கொக்குவில் மேற்கில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, செல்வன் மாமா, அம்மன் ஆன்ரி, ஞானவன் மாமா, மற்றும் மாமாமார், மாமிமார், நல்லூரில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கொக்குவில் மேற்கு சொர்ண சித்தி விநாயகர் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

துவாரகை,
பூநாறி வேலடி,
கொக்குவில் மேற்கு

(30081)

இப்பத்திரிகை நிரு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 298/2 இல் அமைந்துள்ள அச்சகத்தில் 26 03 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org